திங்கட்கிழமை, 1981, மே 11.

சித்திரை 29, துன்மதி, திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.''

அசைவற்ற தெளிந்த அறிவினையுடையவர் துன்பத்தில் சிக்குண்டாலும் அத்துன்பத்தைத் தீர்ப்பதற்காக இழிவான செயல்களைச் செய்ய மாட்டார்.

1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மத்திய அரசு இம்மாநிலத் திட்டங்களுக்கென ஒதுக்கிய தொகை.

*வினா எண் 1047— திரு. எஸ். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

1977-1978, 1978-1979, 1979-1980ஆம் ஆண்டுகளில் மத்திய அரசு இம்மாநிலத் திட்டங்களுக்கென ஒதுக்கிய தொகைகளில் எந்தெந்த இனங்களில் எவ்வளவு ரூபாய் செலவிடப்படாமல் மத்திய அரசுக்கு திரும்ப அளிக்கப் பட்டது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: 1977-78, 1978-79, 1979-80 ஆம் ஆண்டுகளில் மத்திய அரசு இம்மாநிலத் திட்டங் களுக்கென ஒதுக்கிய தொகைகள் முழுவதும் கிடைக்கப்பெற்று பயன்படுத்தப்பட்டு விட்டன. ஆகவே எந்த தொகையும் செலவிடப்படாமல் மத்திய அரசுக்கு திரும்ப அளிக்கப்பட வில்லை.

பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை அரசு விடுமுறையாக அறிவிக்கும் திட்டம்.

*வினா எண் 1048— திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை அரசு விடுமுறையாக அறிவிக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.